த. நா.ச.பே. எண் : 008 நாள் : 24.03.2020

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110—ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 24.3.2020

**செய்தித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

நம் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், நமது மாநிலம் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டவர்களை சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவும், மணி மண்டபங்கள், நினைவிடங்கள், நினைவு இல்லங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கி, பராமரித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக,

1. வீரபாண்டிய கட்டபொம்மன் தன் தளபதியாக மட்டுமல்லாமல், மகனாகவும் நினைத்துப் போற்றிய, திருநெல்வேலி சீமை தந்த தீரம் மிக்க சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன். தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அமைந்துள்ள அன்னாரின் மணி மண்டபத்தில், பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, முழுவுருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
2. பணிக் காலத்தில் பத்திகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட மருத்துவ நிதி உதவி 50 ஆயிரம் ரூபாயிலிருந்து, ஒரு லட்சம் ரூபாயாக 1.8.2018 அன்று முதல் உயர்த்தி வழங்கிட நான்

ஆணையிட்டேன். இம்மருத்துவ நிதி உதவி 2 லட்சம் ரூபாயாக தற்போது உயர்த்தி வழங்கப்படும்.

3. தூத்துக்குடி மக்களால் ''**மக்களின் தந்தை**'' என போற்றப்படுபவரான ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் அவர்களின் சேவையை போற்றும் வகையில், அவரது பிறந்த நாளான **நவம்பர் 15ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும்** என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அச்சமயம் தூத்துக்குடி, பாளையங்கோட்டை சாலையில் உள்ள அன்னாரது சிலைக்கு, **மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.**

## தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தொழில் வளர்ச்சியில், தமிழ்நாடு மேலும் மேன்மை அடையும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொழிற் பூங்காவில், முதற்கட்டமாக சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவ மூலப்பொருட்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் தொடங்குவதற்கு ஏதுவாக **மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் நிறுவனத்தால் 770 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.** மருந்து உற்பத்திக்கு தேவையான அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் குறிப்பாக, கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை, மூலப்பொருட்கள் சேகரிப்பு நிலையம், உலர் மற்றும் குளிரூட்டு நிலையம், நவீன ஆய்வக வசதிகள், கிடங்குகள், அவசரகால நடவடிக்கை மையம் உட்பட அனைத்து வசதிகளும் உள்ளடக்கியதாக இப்பூங்கா இருக்கும்.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

நடப்பாண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1) கொரோனா வைரஸ் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், சார்ஸ் போன்ற தொற்று நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மாநில அளவிலான தனிமைபடுத்தப்பட்ட மருத்துவமனையாக, தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையும், மூன்று மண்டல அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளாக, மதுரை மாவட்டம், தோப்பூரில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையும், கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் சானடோரியம் ஆகிய மருத்துவமனைகளும், சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து நிலையத்திலுள்ள ஆய்வகத்தை Bio Safety Level-III நிலைக்கு மேம்படுத்துவதற்கும் 110 கோடி ரூபாய் செலவிடப்படும்.
2) ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை உடனடி சிகிச்சை மேற்கொள்ள துரிதமாக மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக வான்வழி அவசர கால சேவை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. நிர்வாக வசதிக்காகவும், மக்களுக்கு அரசின் திட்டங்கள் விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், **நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தமிழ்நாட்டின் 38வது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்படும்.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும், உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கான **உணவுத் தொகை 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.**

**2. உயர் கல்வித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

உயர் கல்வி மாணாக்கர் சேர்க்கையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி சாதனை படைத்த மாண்புமிகு அம்மாவை சிறப்பிக்கும் வகையில், தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்திற்கு **டாக்டர் ஜெ.ஜெயலலிதா வளாகம்** என்று பெயரிட்டு, அவ்வளாகத்தில் மாண்புமிகு அம்மாவின் **திருவுருவச் சிலை அமைக்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**